நவம்பர் 1, 2024 முதல் அக்டோபர் 31, 2025 வரையிலான ஆண்டிற்கான

**இந்தியா மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின்**

## ஆண்டு நிகழ்ச்சி

# செயல் சீர்திருத்தம்

## *(ISLAH-E-AMAL)*
## *REFORMATION OF DEEDS*

**இந்தியா மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆண்டு இஜ்திமாவுக்காக சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் வழங்கிய அருளுக்குரிய தூதுச் செய்தி**

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نَحۡمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

خدا کے فضل اور رحم کے ساتھ

ھوالناصر

(இறைவனின் அருளுடனும் கருணையுடனும்)

(அவனே உதவியாளன் ஆவான்)

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு

**அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹூ**

நீங்கள் உங்களது 54 ஆவது தேசிய ஆண்டு இஜ்திமாவுக்காக தூதுச் செய்தி அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளீர்கள். இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்திலிருந்து பலனடைந்தவாறு செயல் சீர்திருத்தம் தொடர்பாக சில முக்கியமான விஷயங்களை உங்கள் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன். செயல் சீர்திருத்தம் எனும் தலைப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இது மனிதனைத் தன் படைப்பாளனின், எஜமானனின் விருப்பத்தைப் பெறுவதன் பக்கம் அழைத்துச் செல்லும் வழியாகும். செயல் சீர்திருத்தம் மூலமாகவே மனிதன் தனது ஈமானை வலுப்படுத்துகிறான். ஆன்மிக முன்னேற்றத்திற்கான படித்தரங்களைக் கடக்கிறான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “நினைவில் கொள்ளுங்கள்! செயல் நிலை சரியாகாத வரை

வெறும் வாய்ப்பேச்சுகளால் ஒன்றும் ஆவதில்லை. எந்த நபர் இறைவனை உண்மையான முறையில் தன்னைப் படைத்துப் பரிபாலிப்பவனாகவும், தீர்ப்பு நாளின் எஜமானாகவும் புரிகிறாரோ அவர் திருட்டு, தீய நடத்தை, சூதாட்டம் அல்லது இதர வெட்கக்கேடான செயல்களில் ஈடுபடுவது சாத்தியமே இல்லை.

ஏனென்றால், இவையனைத்தும் அழித்துவிடக்கூடியவை; இவற்றின்படி செயல்படுவது இறைகட்டளைக்கு முற்றிலும் கட்டுப்படாமையாகும் என்பதை அவர் அறிவார். எனவே, மனிதன் தான் உண்மையில் இறைவன் மீது உண்மையான, உறுதியான ஈமான் கொண்டுள்ளான் என்பதை செயல் ரீதியில் நிரூபித்துக் காட்டிடாத வரை, இறை நெருக்கம் பெற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த அருள்களும் பரக்கத்துகளும் .கிடைக்கப் பெற முடியாது (அவனுக்குக்)”

(மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் (32

எனவே, நாம் நம்முடைய அமல்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவற்றை மேம்படுத்த தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும். அதற்காக நாம் நம்முடைய உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதான அன்பை உருவாக்குவது அவசியமாகும். உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான அன்பு இருக்கும் போது, பிறகு, அவனுடைய கட்டளைகள்படி அமல் செய்வதும் எளிதாக இருக்கும். இறைவன் மீது சொந்த அன்பை உருவாக்குவதற்குத் தொழுகைகளை முறையாகப் பேணுவது மிகவும் அவசியமாகும். தொழுகை மனிதனை அல்லாஹ்வுடன் இணைக்கும் ஏணிப்படியாகும்.

எனவே, தொழுகைகளை சிறப்பான ஏற்பாட்டுடன் நிறைவேற்றிடுங்கள். தொழுகைகளை உரிய நேரத்திலும், ஜமாஅத்தாக நிறைவேற்றுவதற்கும் முழு முயற்சி செய்யுங்கள். இவ்வாறே சிறப்பான ஏற்பாட்டுடன் திருக்குர்ஆன் ஓதுவதைக் கடைபிடியுங்கள். திருக்குர்ஆன் எத்தகைய மறைநூல் என்றால், அதில் நமக்கு எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உள்ளது. அதை ஓதுவதுடன் சேர்த்து அதன் பொருள் மற்றும் கருத்துகளைப் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள். பிறகு, அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையைக்கூட மீறுவாரோ அவர் ஈடேற்றத்திற்கான வாசலைத் தன்னுடைய கைகளாலேயே தனக்கு அடைத்துக்கொள்கிறார் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். உண்மையான, முழுமையான ஈடேற்றத்திற்கான வழிகளைத் திருக்குர்ஆன் திறந்து தந்திருக்கிறது. மற்ற அனைத்தும் அதன் நிழல்களாக இருந்தன. ஆகவே, நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றி ஓதுங்கள். நீங்கள் யாரையும் நேசித்திடாத அளவு மிக அதிகமாக அதை நேசியுங்கள்.”

(ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 26)

எனவே, திருக்குர்ஆனின் கட்டளைகள்படி செயல்படுவதற்கு முழு முயற்சி செய்யுங்கள். அவற்றை உங்களுடைய நடைமுறை வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ளுங்கள். திருக்குர்ஆனை சரியாகப் புரிந்து, (அதன் பொருளை) அறிந்து கொள்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை வாசிப்பதும் மிகவும் அவசியமாகும். ஏனென்றால், ஹுஸூர் (அலை) அவர்களின் நூல்கள் மற்றும் வழிகாட்டல்களில் நமக்கு எத்தகைய உண்மையான ஆன்மிகக் கருவூலங்கள் மறைந்து கிடக்கின்றன என்றால், அவற்றால் நம்மை செயல் சீர்திருத்தத்தின் வழிகளில் நடைபோட வைத்திட முடியும்.

இது மட்டுமின்றி, நாம் நம்முடைய நல்லொழுக்கங்களைக் கண்காணித்து, அவற்றை சீர்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்பதும்கூட செயல் சீர்திருத்தத்திற்கு மிகவும் அவசியமாகும். நல்லொழுக்கங்கள் மூலமாகவே நம்மால் மற்றவர்களுடைய உள்ளத்தில் இடம்பிடிக்க முடியும். அவர்களை இஸ்லாத்தின் அழகிய போதனைகள் பக்கம் ஈர்த்திட முடியும். எனவே, எந்நேரமும் உங்களுடைய நல்லொழுக்கங்களைக் கண்காணித்திடுங்கள். எவருடனும் அநாகரிகமாகவோ, தீயொழுக்கத்துடனோ நடந்து கொள்ளாதீர்கள். ஒவ்வொருவருடனும் அன்பு, நேசத்துடன் பழகுங்கள். ஒருவர் மற்றவரை கவனித்துக் கொண்டவாறு உண்மையான சகோதரத்துவத்தின் சுற்றுச்சூழலை உருவாக்குங்கள்.

பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்கள், இன்னும் சொல்வதாயின், ஒவ்வொரு கிளையமைப்பின் உறுப்பினர்களும் தாம் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நினைவில் வைத்திருங்கள். நீங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பேன் என்று எடுத்துக் கொண்ட அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக அந்த விஷயங்கள்படி செயல்படுவதற்கு முயற்சியும் செய்வது அவசியமாகும். உங்களது நேரத்தை சரியாகப் பயன்படுத்துங்கள். வீணான விஷயங்கள் மற்றும் வீணான வேலைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். உங்களது நேரத்தை வீண் பேச்சுக்கள் மற்றும் வீணான விஷயங்களில் வீணடிப்பதற்கு பதிலாகப் பயனுள்ள பணிகளில் செலவிடுங்கள்.

இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்கள் மூலமாக பல்வேறு வகையான தீமைகள் பரவுகின்றன. அவற்றிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். தேவையில்லாத சமூக ஊடகப் பயன்பாட்டைத் தவிர்த்திடுங்கள். இஸ்லாமிய போதனையை விட்டுத் தொலைவில் அழைத்துச் செல்லக்கூடிய ஒவ்வொரு செயலை விட்டும் விலகியிருங்கள்.

நினைவில் கொள்ளுங்கள்! உங்களது வயது எத்தகையது என்றால், இதில் மனிதனுக்குள் இயல்பாகவே உணர்வும் உத்வேகமும் இருக்கும். அந்த உணர்வையும் உத்வேகத்தையும் சரியான திசையில் பயன்படுத்துவீர்களாயின், நீங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆகின்ற அதே வேளையில், மக்களும் உங்களுடைய நல்ல முன்மாதிரிகளைப் பார்த்து உங்கள் பக்கம் ஈர்க்கப்படுவார்கள். எனவே, உங்களுடைய ஆற்றல்களை மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதில் அர்ப்பணித்து விடுங்கள். ஜமாஅத் பணிகளில் அதிகதிகமாக பங்கு பெறுங்கள். தப்லீக் களத்தில் முன்னேறுங்கள். உங்களுடைய பகுதிகளில் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். மக்களுக்கு இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் அழகான போதனையைத் தெரியப்படுத்துங்கள்.

இன்றைய நாள்களில் உலகம் பாவத்திலும், வழிகேட்டிலும் மூழ்கிக் கிடக்கின்றது. எங்கும் குழப்பம் நிலவியுள்ளது. மக்கள் ஒழுக்க சீர்கேட்டுக்கு ஆளாகியுள்ளார்கள். அதற்கான சிகிச்சையும், தீர்வும் அவர்கள் தங்களின் உண்மையான படைப்பாளனை அடையாளம் கண்டு

கொண்டு தங்களுடைய இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்தி அடியார்களுக்கான உரிமையை செலுத்துவதுடன் சேர்த்து மற்றவர்களுக்கான உரிமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றக்கூடியவர்களாக ஆவதிலேயே இருக்கிறது. எனவே, மக்களை இதன்பால் வழிநடத்துவதும், அவர்களிடம் 'உங்களுக்கு ஓரிறைவன் இருக்கின்றான். அவனை ஏற்றுக் கொண்டு, அடையாளம் கண்டு கொண்டு, அவனை வணங்குவதற்கான உரிமையை செலுத்தியே உங்களால் ஈடேற்றம் அடைய முடியும்' என்று கூறுவதும் உங்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். எனவே, இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக முதலில் உங்களது செயல் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அதைப் பெறுவதற்காக துஆக்களையும் குறிப்பாகப் பேணி வாருங்கள்.

துஆ நமக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல்வாய்ந்த ஆயுதம் ஆகும். நம்முடைய பணிகள் துஆக்களின் மூலமாகவே நடைபெறும். எனவே, உங்களுடைய தொழுகைகளில், உங்களுடைய நஃபில்களில் உங்களது சீர்திருத்தத்திற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ்விடம் அவன் உங்களுக்குத் தன்னுடைய கட்டளைகள்படி அமல் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்கிட உதவி கோருங்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் உங்களுடைய அமல்களை உண்மையான முறையில் சீர்திருத்துவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! இந்த இஜ்திமாவையும் எல்லா விதத்திலும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! உங்கள் அனைவருக்கும் இதன் நிகழ்ச்சிகளிலிருந்து முழுமையான முறையில் பலன் பெறுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

**(அன்பிற்குரிய ஹுஸூர்,**
**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
**அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்**
**அவர்களின் அருளுக்குரிய கையொப்பம்)**

بسم الله الرحمن الرحيم

# இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் சாஹிப் அவர்களின் வேண்டுகோள்கள் காயித்மார்கள் சிறப்பு கவனம் செலுத்தவும்!

ஒவ்வோர் ஆண்டைப் போன்று இவ்வாண்டும் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குத் தனது 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான (நவம்பர் 1, 2024 முதல் அக்டோபர் 31, 2025 வரையிலான) ஆண்டு நிகழ்ச்சியை வடிவமைத்து சமர்ப்பிப்பதற்கு நல்வாய்ப்பு கிடைக்கிறது.

மஜ்லிஸ் குத்தமுல் அஹ்மதிய்யாவின் பணிகளின் விவரமும் வழிமுறைகளும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்கான லாயிஹா அமலில் (செயல் திட்டத்தில்) அடிப்படையாக இருக்கின்றன. ஒவ்வொரு பொறுப்பாளரும் லாயிஹா அமலை (செயல் திட்டத்தைக்) கண்டிப்பாகப் படிக்க வேண்டும். மஜ்லிஸ்களின் வசதிக்காகவும் மஜ்லிஸ்களின் பணிகளை ஒரே விதமாக ஆக்குவதற்காகவும், ஒன்றுபட வைப்பதற்காகவும் கடந்த பல ஆண்டுகளாக ஆண்டு நிகழ்ச்சிகள் வடிவில் மஜ்லிஸ்களின் பணிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பணிக்காகவும் தேதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்வாறு இந்தியாவின் அனைத்து மஜ்லிஸ்களும் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தக்கூடும்.

ஆனால், இப்போதும் சில மஜ்லிஸ்கள் முழுமையான முறையில் ஆண்டு நிகழ்ச்சிகளைக் கடைபிடிப்பதில்லை என்பது காணப்படுகிறது. மஜ்லிஸ்கள் இந்த ‘ஆண்டு நிகழ்ச்சியைக்’ கடைபிடித்தால், அவர்களின் பணிகளில் இயல்புக்கு அப்பாற்பட்ட முன்னேற்றமும் வேகமும் ஏற்பட முடியும். ஜமாஅத் சகோதரர்களின் ஓர் அடிப்படையான தனிச்சிறப்பு, அவர்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகிறார்கள்; தமது உயர்நிலையைக்

காட்டுகிறார்கள் என்பதாகும். அல்லாஹ்வின் அருளால் நாம் அனைவரும் ஓர் அமைப்பில் கோர்க்கப்பட்டிருக்கிறோம். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கொடியின் கீழ் தொண்டுகள் ஆற்றுகிறோம். எனவே, நாம் தலைமையக லாயிஹா அமலையும் (செயல் திட்டத்தையும்) நிகழ்ச்சியையும் செயல்படுத்த வேண்டிய, அதற்குக் கட்டுப்பட வேண்டிய தேவையுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்தில் சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களால் இந்திய ஜமாஅத் மக்களின் தர்பிய்யத்துக்காக எடுத்துரைக்கப்பட்ட நான்கு வழிகாட்டல்கள் (நான்கு அம்ச நிகழ்ச்சிகள்) பதியப்பட்டுள்ளன. இந்த நான்கு வழிகாட்டல்களும் நமக்கு அடிப்படையான, நிரந்தரமான செயல் திட்டமாகும். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் அனைத்துப் பணிகளும் அதையே சுற்றி இருக்கின்றன. எல்லா காயித்மார்களும் இந்த நான்கு வழிகாட்டல்களையும் செயல்படுத்த வைப்பது தொடர்பாக முழுமுயற்சிடன் கடினமாக உழைத்து கவனத்துடன் தொண்டாற்றியவாறு தாக்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளவும்.

அல்லாஹ்வின் அருளால் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய செயற்குழுவுக்கு ஏப்ரல் 2021 இல் சய்யிதுனா ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் மெய்நிகர் (Virtual) சந்திப்பிற்கான நற்பேறு கிடைத்தது. இந்த சந்திப்பில் அன்பிற்குரிய எஜமானர் அவர்கள் விவரமாக ஒவ்வொரு துறை சம்பந்தமாக வழிகாட்டல் வழங்கினார்கள். நாம் அனைரும் இதற்கு ஏற்ப அவசியம் செயல்பட வேண்டும்.

எனவே, அஹ்மதிய்யத்தின் காதிம்களே!! உயர்வான அந்தஸ்த்திலிருக்கும் நம் அன்பிற்குரிய இமாம் அவர்களின் இந்த அறிவுரைக்கு ‘லெப்பைக்’ என்று கூறியவாறு இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களத்தில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள். இறைவனின் படைப்பினங்களுக்காக அனுதாபத்தை வெளிப்படுத்தியவாறு அவர்கள் வரை இஸ்லாத்தின் உண்மையான தூதுச்

செய்தியை எட்ட வைப்பதில் தங்களுடைய இரவையும் பகலையும் ஒன்றாக்கி செயல்படுங்கள். இவ்வாறு நாம் மிக விரைவாக இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் கொடி உலகில் பரப்பதைக் காண முடியும்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் நாட்டின் சட்ட திட்டங்கள் மற்றும் ஜமாஅத்தின் விதிமுறைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட வண்ணம் முழு எச்சரிக்கையுடன் நடத்துங்கள்.

இவ்வாறே, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் 2024 ஆம் ஆண்டிற்காக **"ISLAHE AMAL - செயல் சீர்திருத்தம்"** என்ற Theme (மையக்கருவு)க்கு ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

குத்தாம் மற்றும் அத்ஃபால் இதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் தம்முடைய செயல்களை இன்னும் சிறப்பாக்குவதற்கும் நல்லவையாக்குவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். மேலும், நற்செயல்கள் ஆற்ற வேண்டும். அஹ்மதிய்யா கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருக்க வேண்டும். மேலும், தமது அறிவையும் ஈமானையும் அதிகரிப்பதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹ் தங்கள் அனைவருடனும் இருப்பானாக! சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த வழிகாட்டல்கள் படி செயல்படுதவற்கும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தொண்டுகள் ஆற்றுவதற்கும் நல்வாய்ப்பு வழங்கிக் கொண்டே செல்வானாக! ஆமீன்!

ஷமீம் அஹ்மத் ஃகோரீ

**சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத்**

# ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சிறப்பு வழிகாட்டல்கள் - நான்கு அம்ச நிகழ்ச்சிகள்

1. எல்லா மர்கஸீ (தலைமையக) பள்ளிவாசல்களிலும், ஜமாஅத்தின் ஹல்கா (வட்டார) பள்ளிவாசல்களிலும் ஐந்து வேளைகளிலும் முழுமையான வருகையுடன் ஜமாஅத்தாகத் தொழுவதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தவும். இது தொடர்பாக, வட்டார அளவிலான அனைத்து ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளையமைப்புகளின் அனைத்துப் பொறுப்பாளர்களும், வட்டாரத்தில் எந்தெந்த சகோதரர்கள் தொழுகைகளில் சோம்பல் காட்டுபவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி முழுவதுமாக ஆய்வு செய்து குறிப்பெடுக்கவும். பிறகு அப்படிப்பட்ட எல்லா சகோதரர்களுக்கும் வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளையமைப்பின் பொறுப்பாளர்களும் பொருத்தமான முறையில், தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கவனமூட்டவும்.

அந்தப் பொறுப்பாளர்களின் கவனமூட்டும் முறை எந்த அளவுக்கு நல்ல வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் இருக்க வேண்டுமென்றால், அத்தகைய சகோதரர்கள் அனைவருக்கும் தமது பலவீனத்தைப் பற்றி உணர்வு ஏற்பட்டுவிட வேண்டும்; அவர்கள் தம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய சகோதர்கள் திருப்பி அந்தப் பொறுப்பாளர்களின் மீதே தவறான எண்ணம் கொள்ளும் அளவுக்கு எந்த வழிமுறையும் மேற்கொள்ளக் கூடாது. அதற்காக எல்லாற்றிக்கும் முதலாக அனைத்து மேலிட அளவிலான, வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளையமைப்புகளின் பொறுப்பாளர்களும் தம்முடைய மற்றும் தம் பிள்ளைகளுடைய முன்மாதிரியைக் காட்ட வேண்டும். பொறுப்பாளர்கள் அல்லது அவர்ளுடைய பிள்ளைகளே தொழுகைகளில் சோம்பல் காட்டுபவர்களாக இருந்து கொண்டு ஜமாஅத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் ஜமாஅத்தாகத் தொழுமாறு அறிவுறுத்துவது என்பது நடக்காது.

2. ஒவ்வொரு மர்கஸீ (தலைமையக) பள்ளிவாசலிலும் வட்டார பள்ளிவாசலிலும் ஃப்ஜர் மற்றம் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு திருக்குர்ஆன் தர்ஸ், ஹதீஸ் தர்ஸ் வழங்குவதற்கான ஏற்பாடு தொடர்ச்சியாக இருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்திலும் அதிகமான

சகோதரர்கள் வருகை தருவதற்கும் வட்டார அளவில் உள்ள ஜமாஅத், கிளை அமைப்புகளின் அனைத்து நிர்வாகமும் முயற்சி செய்ய வேண்டும்.

3. காலத்தின் கலீஃபா அவர்களின் ஜுமுஆ பேருரை, அவ்வாறே, இரு பெருநாள் பேருரைகள், பல்வேறு நாடுகளில் நடக்கும் மாநாடுகள், கிளை அமைப்புகளின் இஜ்திமாக்கள் ஆகிய சந்தர்ப்பங்களில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை ஜமாஅத் சகோதரர்கள் ஒன்றாக அமர்ந்து கேட்பதற்கும் பார்ப்பதற்கும் ஜமாஅத் ஏற்பாட்டாளர்கள் சார்பாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு இருக்க வேண்டும்.

இதற்காகவும் எல்லாவற்றிற்கும் முதலாக அனைத்து தலைமையக, ஜமாஅத் அளவிலான மற்றும் கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் தமது பிள்ளைகளுடன் இந்த சந்தர்ப்பங்களில் வந்து தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அதற்குப் பிறகு ஜமாஅத்தின் மற்ற சகோதரர்களுக்கு அதை வலியுறுத்த வேண்டும்.

4. இந்திய ஜமாஅத் சகோதரர்களின் தர்பிய்யத்திற்காக ஜமாஅத் பத்திரிகையான பத்ர் வாரப் பத்திரிகையின் பதிப்புகள் உருது மட்டுமின்றி ஹிந்தி மற்றும் பிற மாநில மொழிகளிலும் துவங்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துப் பதிப்புகளிலிருந்து ஜமாஅத் சகோதர்கள் எந்த அளவுக்குப் பயன் பெறுகிறார்கள் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜமாஅத் பத்திரிகையின் ஒரு பிரதி கண்டிப்பாக செல்ல வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வழிகாட்டல்களை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தியாவின் ஜமாஅத் மக்களின் தர்பிய்யத்துக்காக எடுத்துரைத்துள்ளார்கள். கண்ணியத்திற்குரிய காயித்மார்கள் அனைவரும், (ஹல்கா) ஸயீம்மார்களும் அத்ஃபால் செயலர்களும் ஏனைய பொறுப்பாளர்களும் இந்த வழிகாட்டல்களை ஆண்டு முழுவதும் செயல்படுத்தவும். அனைத்து குத்தாம் மற்றும் அத்ஃபாலை இந்த வழிகாட்டல்களைக் கடைபிடிக்கக்கூடியவர்களாக ஆகச் செய்யவும்.

## ❋கண்ணியத்திற்குரிய காயித்மார்களுக்கான (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள்❋

லாயிஹா அமலுக்கு (செயல் திட்டத்துக்கு) ஏற்ப குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளர்களும் லாயிஹா அமல் மற்றும் தஸ்த்தூரே அஸாஸீ ஆகிய நூல்களைக் கண்டிப்பாகப் படித்திருக்க வேண்டும். எனவே, மஜ்லிஸ்களுக்கு ஆண்டில் குறைந்தது ஒருமுறையாவது (Refresher Classes) புத்தாக்க வகுப்புகளுக்கான ஏற்பாடு செய்து எல்லாப் பொறுப்பாளர்களுக்கும் எழுத்துப்பூர்வமான தேர்வு நடத்தி, அதன் முடிவுகளை தேசிய அலுவலகத்திற்கு அனுப்புவது மிக மிக அவசியமாகும். இவ்வாறு பொறுப்பாளர்களுக்குத் தமது பொறுப்புகள் மற்றும் பணிவட்டம் குறித்து தெரிய வரும். மேலும், அவர்களால் சிறந்த முறையில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணிகளை நடத்த முடியும்.

எனவே, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட மஜ்லிஸ்களும் 15 டிசம்பர் 2024 வரை தமக்கு சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் (Refresher Classes) புத்தாக்க வகுப்புகளை நடத்துங்கள்.. அதற்குப் பிறகு இந்த வகுப்புகள் நடைபெற்றது தொடர்பான அறிக்கையைத் தனியாக குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகத்திற்கு அனுப்புவதும் அவசியமாகும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் மஜ்லிஸ்களுடைய கண்ணியத்திற்குரிய காயித்மார்கள் மற்றும் அவர்களின் செயற்குழு உறுப்பினர்களுக்கான (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடத்துவது மாவட்ட காயிதின் பொறுப்பாகும். உள்ளூர்/மாவட்ட மஜ்லிஸ்கள் தமது வசதிக்கேற்ப தம்முடைய பொறுப்பாளர்களுக்கு (Refresher Class) புத்தாக்க வகுப்பு நடத்தலாம். உள்ளூர்/மாவட்ட மஜ்லிஸ்களும் ஆண்டின் துவக்கத்திலேயே தம்முடைய பொறுப்பாளர்களுக்கு (Refresher Class) புத்தாக்க வகுப்பு நடத்தி தேர்வு முடிவை தேசிய அலுவலகத்திற்கு அனுப்பவும்.

# ✵ தர்பிய்யத் கூட்டங்களுக்கான தலைப்புகள் ✵

தர்பிய்யத் கூட்டங்களில் கீழ்கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கான ஏற்பாடு செய்யவும். இது போக, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நடப்பு மாதத்தில் ஆற்றிய அனைத்து ஜுமுஆ பேருரைகளிலிருந்தும் முக்கியமான கருத்துகள் மற்றும் குத்பா சுருக்கங்கள் ஆகியவற்றையும் தர்பிய்யத் கூட்டங்களில் விவாதிக்கவும். அப்போதுதான் குத்தாமுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களில் வழங்கப்படும் முக்கியமான வழிகாட்டல்கள் குறித்து தெரிய வரும்.

| | |
|---|---|
| நவம்பர் 2024 | தொழுகையை நிலைநாட்டுவதன் முக்கியத்துவம் |
| டிசம்பர் 2024 | மர்கஸுக்கு வருதல் (ஸியாரத் செய்தல்) மற்றும் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது ஆகியவற்றின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் |
| ஜனவரி 2025 | செயல் சீர்திருத்தம்<br>(Islahe Amal) |
| ஃபிப்ரவரி 2025 | ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் அதன் பின்னணி |
| மார்ச் 2025 | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு |
| ஏப்ரல் 2025 | தற்காலத்தில் வக்ஃபேநவ் / வக்ஃபே ஸிந்தகீயின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் |
| மே 2025 | கிலாஃபத்தின் உறுதிப்பாடும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும் |
| ஜூன் 2025 | வஸிய்யத் அமைப்பின் வரலாறும் தற்காலத்தில் அதன் அவசியமும் |
| ஜூலை 2025 | பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும் |
| ஆகஸ்ட் 2025 | (حُبُّ الْوَطَنِ مِنَ الْاِيْمَانِ)<br>நாட்டுப் பற்று கொள்வது ஈமானின் அங்கமாகும் |
| செப்டம்பர் 2025 | திருமண வரன் தொடர்பான பிரச்சனைகளும் நம்முடைய பொறுப்புகளும் |
| அக்டோபர் 2025 | இஸ்லாமிய போதனைகள்படி மனிதனின் உடல் நலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் |

# ✵தர்பிய்யத் முகாம்✵

இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத் முகாம்கள் நடத்துவது அவசியமாகும். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் அனைத்து மஜ்லிஸ்களின் கண்ணியத்திற்குரிய காயித்மார்கள் தம் மாவட்ட காயித் சாஹிப் அவர்களுடன் இணைந்து மாவட்ட அளவில் பிப்ரவரி 2025 இன் முதல் வாரத்தில் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி, இயன்ற அளவுக்குத் தத்தமது மஜ்லிஸ்களில் இரண்டு நாள் தர்பிய்யத் முகாம்கள் நடத்துவதை உறுதிப்படுத்தவும். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்முடைய பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும், சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உயரிய எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்ப காதிம்களுக்குத் தர்பிய்யத் வழங்குவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன். தர்பிய்யத் முகாம்களுக்காகத் தரப்படும் நிகழ்ச்சிகள் கீழே உள்ளன. நிகழ்ச்சியின் விவரப்படி, அனைத்து காயித்மார்களும் நேரம் மற்றும் தேதியை நிர்ணயித்துக் கொள்ளவும். அலுவலகத்திலிருந்து அனுமதி பெற்றவாறு தர்பிய்யத் முகாம்களை நடத்தவும்.

| |
|---|
| தஹஜ்ஜுத் தொழுகை |
| ஃபஜ்ர் தொழுகை மற்றும் தர்ஸ் |
| காலை உணவு |
| திருக்குர்ஆன் அனைத்து வித அறிவின் கருவூலமாகும் |
| "பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு |
| "கிலாஃபத்தின் உறுதிப்பாடும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு (தலைமையக பிரதிநிதி சொற்பொழிவாற்றுவார்) |
| Detail Group Discussion: 'செயல் சீர்திருத்தம் தொடர்பான பொன்னான அறிவுரைகள்' என்ற நூலிலிருந்து. |
| ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரையிலிருந்து வினாடி வினா போட்டி |
| விளையாட்டுப் போட்டிகள் |

**மேற்கூறப்பட்டுள்ள விவரப்படி, தர்பிய்யத் முகாமின் நிகழ்ச்சியை வடிவமைத்துக் கொள்ளவும். நேரத்துக்குப் பொருத்தமாக உள்ளூர் மஜ்லிஸ்கள் தங்கள் தரப்பிலிருந்தும் நிகழ்ச்சியை இணைத்துக் கொள்ளவும்.**

# ✵தஃலீம் துறையின் ஏற்பாட்டின் கீழ் நூல்கள் வாசிக்கும் திட்டம்✵

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் நூல்களை வாசிப்பதன் பால் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலை செயல்படுத்தியவாறு தஃலீம் துறை ஒவ்வோர் ஆண்டும் சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் உடைய சில நூல்களை வாசிப்பதற்காக நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு காதிமும் கண்டிப்பாக அந்த நூல்களை வாசிக்க வேண்டும் என்று காதிம்களிடம் எதிர்பார்க்கிறது.

இவ்வாண்டு தஃலீம் துறை ஆண்டு முழுவதும் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி, நூல்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த நூல்களை அனைவருக்கும் ஒன்றாக, வகுப்புகள் வடிவிலும் மற்றும் Group Discussion வடிவிலும் படித்துக் கொடுக்கவும். இந்த நூல்களிலிருந்து முழுமையான முறையில் பயனடைவதை உறுதி செய்யவும். தனிப்பட்ட முறையிலும் இந்த நூல்களை வாசிக்குமாறு காதிம்களுக்கு வலியுறுத்தவும். வாசிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நூலின் ஆங்கில மற்றும் ஹிந்தி மொழியாக்கங்களும் நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியானில் உள்ளன. இவ்வாறே ஜமாஅத்தின் இணையதளங்களிலும் உள்ளன.

| | |
|---|---|
| நவம்பர் 2024 | செயல் சீர்திருத்தம் தொடர்பான பொன்னான அறிவுரைகள் (முதல் பாதி) |
| டிசம்பர் 2024 | செயல் சீர்திருத்தம் தொடர்பான பொன்னான அறிவுரைகள் (இரண்டாம் பாதி) |

| | |
|---|---|
| ஜனவரி 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 1 முதல் 50 வரை) |
| ஃபிப்ரவரி 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 51 முதல் 100 வரை) |
| மார்ச் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 100 முதல் 150 வரை) |
| ஏப்ரல் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 151 முதல் 200 வரை) |
| மே 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 201 முதல் 250 வரை) |
| ஜூன் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 251 முதல் 300 வரை) |
| ஜூலை 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 301 முதல் 350 வரை) |
| ஆகஸ்ட் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 351 முதல் 400 வரை) |
| செப்டம்பர் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 401 முதல் 450 வரை) |
| அக்டோபர் 2025 | பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5)<br>(ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 451 முதல் 506 வரை) |

# ✵தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு✵

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஆண்டுக்கு மூன்று முறை காதிம்களுக்கு தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு நடத்தப்படுகிறது. தலைமையகம் தரப்பிலிருந்து காதிம்களின் இரண்டு பிரிவுகளுக்குமான (அதாவது, பிரிவு ஒன்று 15 முதல் 25 வயது வரை மற்றும் பிரிவு இரண்டு 26 முதல் 40 வரைக்குமான) வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும். குத்தாமின் அனைத்துப் பொறுப்பாளர்கள் உட்பட மஜ்லிஸின் ஒவ்வொரு காதிமும் இந்தத் தேர்வில் கலந்து கொள்வது அவசியமாகும் என்பதைக் குறிப்பாக கவனத்திற்குக் கொள்ளவும். மஜ்லிஸின் அனைத்து காதிம்களையும் தற்போதிலிருந்தே (தேர்வுக்குத்) தயார் செய்ய வையுங்கள்.

மார்க்கத் தேர்வு நடத்துவதற்கான தேதிகளும் பாடத்திட்டமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. குத்தாமின் இரண்டு பிரிவுகளுக்கும் பாடத்திட்டம் ஒன்றுதான். ஆயினும், வினாத்தாள்கள் தனித்தனி தரத்தில் இருக்கும்.

| | | |
|---|---|---|
| முதல் மார்க்கத் தேர்வு | **16 FEB 2025** | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘யூனுஸ்’ ருகூ 1 முதல் 11 வரை (மொத்தம் 11 ருகூவுகள்)<br>(2) நூல்: செயல் சீர்திருத்தம் தொடர்பான பொன்னான அறிவுரைகள் (முழு நூல்) |
| இரண்டாவது மார்க்கத் தேர்வு | **25 MAY 2025** | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘ஹூத்’ ருகூ 1 முதல் 10 வரை (மொத்தம் 10 ருகூவுகள்)<br>(2) நூல்: பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5) (முதல் பாதி) |
| மூன்றாவது மார்க்கத் தேர்வு | **31 AUG 2025** | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘யூஸுஃப்’ ருகூ 1 முதல் 12 வரை (மொத்தம் 12 ருகூவுகள்)<br>(2) நூல்: பராஹீனே அஹ்மதிய்யா (பாகம் 5) (இரண்டாம் பாதி) |

அத்ஃபாலுக்காக, பிரிவுகளுக்கு ஏற்ப “வக்ஃபேநவ் பாடத்திட்டம்” எனும் நூல் பாடத்திட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எவராது ஒரு திஃப்லுக்கு உருது தெரியாது என்றால் தேர்வுக்கு முன்னதாக வினாத்தாள் மொழிபெயர்க்கப்பட்டு கொடுக்க வேண்டும் என்ற விஷயத்தையும் கருத்திற் கொள்ளவும் **(இது முழு இந்தியாவுக்குமான ஆண்டு நிகழ்ச்சி - மொழிபெயர்ப்பாளர்)**. அனைத்துத் தேர்வுகளின் விடைத்தாள்களையும் மாவட்ட காயித்மார்களுக்கு அனுப்பவும்.

# ❋பரிசுக் கட்டுரை எழுதும் போட்டி❋

இவ்வாண்டு இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தஃலீம் (கல்வித்) துறை தரப்பிலிருந்து பரிசுக் கட்டுரை எழுதும் போட்டியும் நடத்தப்படுகிறது. இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மஜ்லிஸ்களிலும் தம்முடைய அதிகமான உறுப்பினர்களுக்கு இந்தப் பரிசுக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வதற்கு வலியுறுத்தவும். இதில் கலந்து கொள்வதற்காக, காயித்மார்களும் அவர்களின் மஜ்லிஸ் ஆமிலா உறுப்பினர்களும் இத்தகைய காதிம்களுக்கு சாத்தியமான எல்லா ஒத்துழைப்பையும் நல்கவும். இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறையும் நிர்ணயிக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பில், அதிகதிகமாக 800 சொற்களை உள்ளடக்கிய ஒரு கட்டுரை (**Article**) இந்தியாவின் எந்த மொழியிலும் எழுதி குறிப்பிட்ட நேரத்திற்குள் அலுவலகத்திற்கு அனுப்பவும்.

| தலைப்புகள் (TOPICS) | தலைப்பு (THEME) |
|---|---|
| **மார்க்கத் தலைப்பு**<br>Religious Topic<br>(Last Date 31.01.2025)<br>ஏதாவது ஒரு தலைப்பில், சொந்த சொற்களில் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். | (1) திருக்குர்ஆன் இறங்கியது மற்றும் அதைப் பாதுகாத்து வைத்த வரலாறு<br>(2) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம் **“வஸ்ஸிஃ மகானக”** **(உமது இருப்பிடத்தை விரிவுபடுத்துவீராக)** என்பதன் வெளிப்பாடு<br>(3) ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் விவரம் |
| **சொந்த அனுபவம்**<br>Personal Experience<br>(Last Date 30.04.2025)<br>ஏதாவது ஒரு தலைப்பில், சொந்த சொற்களில் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். | (1) இறையிருப்பு குறித்த எனது கருத்து<br>(2) அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் எனது பிணைப்பு<br>(3) காதியான் தாருல் அமானுக்கு சென்றது பற்றிய எனது அனுபவம் |

| | |
|---|---|
| **தற்காலத்தின் பிரச்சனைகளும் அவற்றிற்கான தீர்வும்**<br>Problems of Modern era and their solutions<br>(Last Date 31.07.2025)<br>ஏதாவது ஒரு தலைப்பில், சொந்த சொற்களில் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். | **(1)** உலகப் போர் (**World War**)<br>**(2)** சமூக ஊடகம் (**Social Media**)<br>**(3)** மொபைலுக்கும், மொபைல் திரைக்கும் அடிமையாகுதல் (**Mobile & Screen Addiction**) |

(1) உங்களது கட்டுரையைக் குறிப்பிட்ட நேரத்தில், இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகத்துக்கு அனுப்புவது அவசியமாகும்.

(2) முதல் 5 இடங்களைப் பிடிக்கும் காதிம்களுக்குத் தலா 2000/- ரூபாய் பரிசு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(3) 6 முதல் 10 வரை இடங்களைப் பிடிக்கும் காதிம்களுக்குத் தலா 1000/- ரூபாய் பரிசு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(4) 11 முதல் 15 வரை இடங்களைப் பிடிக்கும் காதிம்களுக்குத் தலா 500/- ரூபாய் பரிசு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(5) இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குக் கட்டுரையை வெளியிடுவதற்கான முழு உரிமை உண்டு.

## ✵ கருத்தரங்கு (Seminar) ✵

| | |
|---|---|
| தப்லீக் செய்வதன் முக்கியத்துவம், தேவை மற்றும் வழிமுறை - தற்காலத்தின் பிரச்சனைகளின் ஒளியில் | 16.02.2025 |
| (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இயற்றிய) பராஹீனே அஹ்மதிய்யா எனும் நூலின் அடிப்படையில் இறையிருப்பு | 15.06.2025 |
| செயல் சீர்திருத்தம் தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள் | 17.08.2025 |

## ✵ மருத்துவ முகாம்கள் ✵

இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் லாயிஹா அமலுக்கு ஏற்ப மாவட்ட மஜ்லிஸ்கள் நிகழாண்டில் மருத்துவ முகாம்கள் நடத்துவது மிகவும் அவசியமாகும். முகாம்களின் தன்மையை மஜ்லிஸ்கள் தமது நிலைமைகளுக்கு ஏற்ப தாமே தீர்மானிக்கலாம்.

**Eye Camp** (கண் பரிசோதனை முகாம்), **Dental Camp** (பல் பரிசோதனை முகாம்), **Sugar Camp** (சர்க்கரை பரிசோதனை முகாம்), **Medical Checkup Camp** (பொதுவான மருத்துவ பரிசோதனை முகாம்) மற்றும் **Homoeopathy Camp** (ஹோமியோபதி முகாம்) முதலியவை.... முகாம் நடத்துவதற்காக மஜ்லிஸ்கள் தங்களது வசதிக்கேற்ப கீழ்வரும் விவரப்படி ஏதாவது ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| April 7 | World Health Day |
| June 14 | World Blood Donor Day |
| August 15 | Independence Day |

# ✵மரம் நடும் வாரம்✵

இவ்வாறே இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் லாயிஹா அமலுக்கு ஏற்ப மாவட்ட மஜ்லிஸ்கள் அதிகதிகமான காதிம்கள் மற்றும் அத்ஃபால் ஆகியோரின் பங்களிப்பை உறுதிப்படுத்தியவாறு நிகழாண்டில் மரம் நடும் வாரத்தை நடத்துவது மிகவும் அவசியமாகும். மரம் நடும் வாரத்தின் தன்மையை மஜ்லிஸ்கள் தமது நிலைமைகளுக்கு ஏற்றபடி தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

மரம் நடும் வாரத்துக்காக மஜ்லிஸ்கள் தங்களது வசதிக்கேற்ப கீழ்வரும் விவரப்படி முக்கியமான நாள்களை கருத்தில் கொண்டு தேதிகைளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| March 22 | World Water Day |
| April 22 | Earth Day |
| June 6 | World Environment Day |
| September 3 | International Day of Peace |

# ✵ தப்லீக் ✵

அல்லாஹுத் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏதேனும் ஒரு நாட்டிற்காகவோ அல்லது ஒரு சமுதாயத்திற்காகவோ அனுப்பவில்லை. மாறாக, உலகில் உள்ள அனைத்து சமுதாயங்கள், அனைத்து மார்க்கங்கள் மற்றும் அனைத்து நாடுகளின் நேர்வழிக்காக அனுப்பியுள்ளான். ஆக, ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நான் இந்த காலத்தில் இறைவன் புறமிருந்து வந்திருப்பது முஸ்லிம்களின் சீர்திருத்ததிற்காக மட்டும் அல்ல. மாறாக, முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகிய மூன்று சமுதாயங்களின் சீர்திருத்ததிற்காகவும் தோன்றியுள்ளேன். இறைவன் என்னை முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளது போன்றே நான் இந்துகளுக்கு அவதாரமாக உள்ளேன். (நூல்: லெக்சர் சியால்கோட் - பக்கம் : 9)

தப்லீக் பணி எந்தஅளவிற்கு விசாலமானதும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும்; மேலும், இந்தக் கடமை மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எந்த அளவிற்கு உத்வேகத்துடனும் துரிதமாகவும் செயல்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்பது மேற்கூறப்பட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளிலிருந்து புலப்படுகிறது. இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தும் தப்லீக் எனும் இந்த முக்கியமான கடமையை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சியை மேற்கொள்கிறது. அல்ஹம்துலில்லாஹ்! ஆனால், இதைப் பலவழிமுறைகள் மூலமாக தலைமையக அமைப்பின் கீழ் மேற்கொண்டு துரிதப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்த வழிமுறைகளிலேயே (ஒன்றாக) தப்லீக் தினம் கொண்டாடப்படுவதும் மிகவும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்: ‘‘பொதுவாக தப்லீக் செய்வது ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமையாகும். ஒவ்வொரு உண்மையான நம்பிக்கையாளரும் தினமும் தப்லீக் செய்து கொண்டிருப்பார் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால், சில பலவீனமான இயல்பு கொண்டவர்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மேலும், யாராவது ஒருவர் வந்து தங்களுக்கு தப்லீக் செய்யுமாறு கூற

வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஆக, யாராவது வந்து தங்களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று செயல்ரீதியாக அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள்.'' (ஜுமுஆ பேருரை: அக்டோபர் 13, 1933)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ''எனவே இன்று உலகை அழிவின் குழிக்குள் விழுவதிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு முஹம்மதிய மஸீஹின் அடிமைகளுடையதாகும். உலகம் நிலைத்திருப்பது இன்று நம் கையில் உள்ளது. இறைவன் இன்று நம்மை உலகத்தின் ஆன்மீக தாகத்தைத் தணிப்பதற்காக நிர்ணயித்துள்ளான். எனவே, இந்தப் பொறுப்பைப் புரிய வேண்டிய தேவை உள்ளது. இந்தப் பணிக்காக சிறிது நூல்கள், பிரசுரங்கள் முதலியவற்றைக் (கொடுப்பது), சில கருத்தரங்குகள் அல்லது சில கூட்டங்கள் நடத்துவது மட்டும் பயனளிக்காது. மாறாக, நம்முடைய ஒவ்வொரு மட்டமும் தத்தமது வட்டத்தில் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக முன்வர வேண்டும். நிரந்தரதன்மையுடன் பணியுடன் ஒன்றிவிட வேண்டும். நமது அமல்களை இஸ்லாத்தின் உண்மையான போதனைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். இறைவனுக்கு முன்பு குனிந்தவாறு இறைவழிபாட்டுக்கான உரிமையை செலுத்தவேண்டும்.''

(2015 ஆம் ஆண்டு ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் நிறைவுரை)

